**செ.வெ.எண்: 61** **நாள்: 30.08.2018**

## நாகப்பட்டினம் மாவட்டம்

## திருக்குவளை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள பணிமனை உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப.அவர்கள் தகவல்

திருக்குவளை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பணிமனை உதவியாளர் 01 பணியிடம் காலியாக உள்ளது. அப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரர் SSLC யுடன் கூடிய மின்சாரப் பணியாளர் தொழிற் பிரிவில் ஆதிதிராவிடர் - (அருந்ததியர் - பெண்), ஆதிதிராவிடர் (அருந்ததியர் - ஆதரவற்ற விதவை பெண்) தேசிய தொழிற் சான்றிதழ் தேர்ச்சி பெற்றவர்கள், பணிமனை உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 01.08.2018 அன்று அதிகபட்ச வயது 35 வரையில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தில் வேலை வாய்ப்பக பதிவு எண் தவறாது குறிப்பிட வேண்டும். முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், திருக்குவளை என்ற முகவரிக்கு 15.09.2018 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு பின்னர் நேர்முகக் காணல் கடிதம் அனுப்பப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப.அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**